செய்தி வெளியீடு எண் : 961 நாள் : 19.05.2023

## செய்தி வெளியீடு

**எரிசக்தித் துறை சார்பில் ரூ.2003 கோடி செலவில் நிறுப்பட்டுள்ள 16 புதிய துணை மின் நிலையங்களை திறந்து வைத்து, 65 துணை மின் நிலையங்களில் திறன் மேம்படுத்தப்பட்ட 67 மின் மாற்றிகளின் செயல்பாட்டினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (19.05.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில், 1859 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள 16 புதிய துணை மின் நிலையங்களையும், 143 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் 65 துணை மின் நிலையங்களில் 853 எம்.வி.ஏ அளவிற்கு திறன் மேம்படுத்தப்பட்ட 67 மின் மாற்றிகளின் செயல்பாட்டினையும் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டில் வளர்ந்து வரும் தொழிற்துறை, விவசாயம், வணிகம், தகவல் தொழில்நுட்ப மையங்கள், மெட்ரோ இரயில் திட்டங்கள், மின்சார வாகன மின்னூட்ட நிலையங்கள் ஆகியவற்றினை கருத்திற் கொண்டு, வளர்ச்சிக்கு தேவையான மின்சாரத்தை தடையில்லாமல் வழங்கிடவும், மேலும், காற்று மற்றும் சூரியசக்தி மூலம் பெறப்படும் பசுமை மின்சாரத்தை முழுமையாக பயன்படுத்திடவும், புதிய துணை மின் நிலையங்கள் அமைத்தல், துணை மின் நிலையங்களின் தரம் உயர்த்துதல், இயக்கத்தில் உள்ள துணை மின் நிலையங்களில் புதிய விகிதாசார அறிமுகம் மற்றும் இயக்கத்தில் உள்ள துணை மின் நிலையங்களில் கூடுதல் திறனுள்ள மின் மாற்றிகள் நிறுவுதல் போன்ற பணிகளை தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

**புதிதாக நிறுவப்பட்டுள்ள 16 துணை மின் நிலையங்களை திறந்து வைத்தல்**

அந்த வகையில், சென்னை மாவட்டம் – புளியந்தோப்பில் புதிய 400 கி.வோ வளிமகாப்பு துணை மின் நிலையம் (Gas Insulated Substation) மற்றும் தூத்துக்குடி மாவட்டம் – ஒட்டப்பிடாரத்தில் புதிய 400 கி.வோ துணை மின் நிலையம் என 1718 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள இரண்டு புதிய 400 கி.வோ துணை மின் நிலையங்கள்;

அரியலூர் மாவட்டம் – நடுவலூர்; செங்கல்பட்டு மாவட்டம் – படூர்; கிருஷ்ணகிரி மாவட்டம் – பெண்ணேஸ்வரமடம் (விகிதாசார அறிமுகம்); மதுரை மாவட்டம் –தனியாமங்கலம் (விகிதாசார அறிமுகம்); நீலகிரி

மாவட்டம் – மலர்பெட்டு; சேலம் மாவட்டம் – நத்தக்கரை மற்றும் திருவள்ளூர் மாவட்டம் – அரசூர் ஆகிய இடங்களில் 94 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்ட ஏழு புதிய 110 கி.வோ துணை மின் நிலையங்கள்;

செங்கல்பட்டு மாவட்டம் – புதுப்பாக்கம்; சென்னை மாவட்டம் – ஆழ்வார்திருநகர்; காஞ்சிபுரம் மாவட்டம் – மாத்தூர்; புதுக்கோட்டை மாவட்டம் – நகரப்பட்டி; திருவள்ளூர் மாவட்டம் – திருமலைவாசன் நகர் மற்றும் திருவாரூர் மாவட்டம் – அடியக்கமங்கலம், எடமேலையூர் ஆகிய இடங்களில் 45 கோடியே 97 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்ட ஏழு புதிய 33/11 கி.வோ துணை மின் நிலையங்கள்;

என மொத்தம் 1859 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள 16 புதிய துணை மின் நிலையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**65 துணை மின் நிலையங்களில் திறன் மேம்படுத்தப்பட்ட 67 மின் மாற்றிகளின் செயல்பாட்டினை தொடங்கி வைத்தல்.**

செங்கல்பட்டு மாவட்டம் – இந்தளூர், இல்லேடு, கடப்பேரி; கோயம்புத்தூர் மாவட்டம் – பவானி பேரேஜ், பட்டணம், ரேஸ் கோர்ஸ், காடுவெட்டிப்பாளையம்; கடலூர் மாவட்டம் – வெள்ளக்கரை; தர்மபுரி மாவட்டம் – பொம்மிடி; திண்டுக்கல் மாவட்டம் – பாப்பம்பட்டி, இலட்சுமணப்பட்டி, நத்தம்; ஈரோடு மாவட்டம் – டி.என்.பாளையம், ந.மேட்டுப்பாளையம், காசிபாளையம், வெண்டிபாளையம்; கள்ளக்குறிச்சி மாவட்டம் – மூங்கில்பாடி, ஆசனூர்; காஞ்சிபுரம் மாவட்டம் – பள்ளிக்கரணை, சிங்காடிவாக்கம், ஸ்ரீபெரும்புதூர் சிப்காட்; கரூர் மாவட்டம் – அய்யர்மலை, புலியூர்; கிருஷ்ணகிரி மாவட்டம் – குருபரப்பள்ளி, பாகலூர், காமன்தொட்டி, சூசூவாடி; மயிலாடுதுறை மாவட்டம் – மணல்மேடு, பாலையூர்;

நாமக்கல் மாவட்டம் – புதன்சந்தை, வளையப்பட்டி; புதுக்கோட்டை மாவட்டம் – கறம்பக்குடி, பாக்குடி, மலையூர், டி.நல்லூர்; இராமநாதபுரம் மாவட்டம் – கடலாடி; இராணிப்பேட்டை மாவட்டம் – புன்னை; சேலம் மாவட்டம் – மின்னம்பள்ளி; சிவகங்கை மாவட்டம் – இளையாங்குடி; தென்காசி மாவட்டம் – சங்கரன்கோவில்; தஞ்சாவூர் மாவட்டம் – மாரியம்மன்கோவில்; தேனி மாவட்டம் – வண்ணாத்திப்பாறை, மார்க்கையன்கோட்டை, தேவாரம்; திருவள்ளூர் மாவட்டம் – திருத்தணி, திருவள்ளூர், பட்டாபிராம், கும்மிடிப்பூண்டி சிப்காட் – III, நொளம்பூர்,

தேர்வாய்கண்டிகை, மப்பேடு; திருவண்ணாமலை மாவட்டம் – கீழ்பென்னாத்தூர், சேத்துப்பட்டு, காஞ்சி; திருப்பூர் மாவட்டம் – பெரியார் நகர், நாரணபுரம், ஏரிப்பாளையம்; திருச்சிராப்பள்ளி மாவட்டம் – வையம்பட்டி; விழுப்புரம் மாவட்டம் – திண்டிவணம், மரக்காணம், தாயனூர், இளமங்கலம்; விருதுநகர் மாவட்டம் – வத்திராயிருப்பு, முத்துராமலிங்கபுரம், அனுப்பங்குளம் ஆகிய இடங்களில் உள்ள 65 துணை மின் நிலையங்களில் 143 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 67 மின் மாற்றிகளின் திறனை கூடுதலாக 853 எம்.வி.ஏ உயர்த்தி, அவற்றின் செயல்பாட்டினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.வி.செந்தில்பாலாஜி, மாண்புமிகு தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., எரிசக்தித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ரமேஷ்சந்த் மீனா, இ.ஆ.ப., தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் தலைவர் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.இரா.மணிவண்ணன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் இயக்குநர் (பகிர்மானம்) திரு. மா.சிவலிங்கராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

.......

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in